Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BODINAYAKANUR

**C.C No. 278 / 2022**

Depositions of செந்தாமரை - ..witness for ...Prosecution Side Witness 1 (LW- 1 )

| | |
|---|---|
| Name | - செந்தாமரை (PW- 1) |
| Father's and Husband's name | - சுந்தர்ராஜ் |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15.05.2023.

**சாட்சி அழைக்கப்பட்டு திரு.S.காளிமுத்து, இளநிலை உதவியாளர் என்பவரால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**( எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் ரெங்கநாதபுரத்தில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். சென்ற வருடம் எனது வீட்டிற்கு பக்கத்தில் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் சென்று சண்டையை விலக்கிவிட்டபோது கும்பலில் யாரோ என்னை கீழே தள்ளிவிட்டனர். போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் கேட்டார்கள், கையொப்பம் செய்து கொடுத்தேன், புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. **கையொப்பம் மட்டும் அதசாஆ.1**. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கு பக்கத்தில் குடியிருக்கும் தெய்வேந்திரன் மற்றும் அவரது மனைவி வைத்தீஸ்வரிக்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டது. ஒருநாள் தெய்வேந்திரன் மற்றும் அவரது மனைவி வைத்தீஸ்வரியை அவரது மாமனார் மற்றும் மாமியார் சண்டை போட்டு அடித்தனர். வைத்தீஸ்வரி அவரது பெற்றோர் வீட்டிற்கு செல்வதற்காக வெளியில் வந்தபோது நானும், அவரது மாமியாரும் அவரை எனது வீட்டில் உட்காரவைத்து பேசினோம் என்றும், அதை மனதில் வைத்துக்கொண்டு 02.05.2022 ம் தேதி இரவு 11 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்தபோது தெய்வேந்திரன் எனது வீட்டிற்கு வந்து என்னை தகாத

வார்த்தைகளால் பேசி கீழே கிடந்த கல்லை எடுத்து எனது தலையில் குத்தி காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அங்கிருந்த எனது மகன், மகள் அவரை விலக்கி விட்டனர் என்றும் காயம்பட்ட என்னை எனது மகன் போடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார் என்றும் அங்கு வந்த போலீசாரிடமம் தெய்வேந்திரன் மீது நடவடிக்கை எடுக்கும் படி புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.05.16 17:51:54 +0530